1993 ஏப்ரல் 2]

மின் இணைப்பு கேட்கும்போது அங்குள்ள வனத்துறை ஆட்சேபம் தெரிவிக்கிறது. இதன் காரணமாக, காலம் காலமாக அந்தப் பகுதிக்கு மின் விளக்கு கொடுக்க முடியவில்லை. ஆகவே, வனத்துறையினுடைய சட்டத்தைத் திருத்தினால் தான் அவர்களுக்கு மின் விளக்குப் போட்டுக் கொடுக்க முடியும் என்ற ஒரு சூழ்நிலை உள்ளது. ஆகவே, மின் விளக்குகள் குறித்து மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத்துறையின் அனுமதியைப் பொறுத்த மட்டிலே, மத்திய அரசுதான் அனுமதி தரவேண்டியிருக்கிறது. ஆகவே, சாலைகள் போடுவதிலே சில நேரங்களில் ‘காட்’ ரோடு என்று சொல்லப் படுகின்ற மலைச் சாலைகள் போடும் போதும் இந்தப் பிரச்சனை வருகிறது. மின்சார கம்பங்கள் நடுகின்ற போதும் இந்தப் பிரச்சினை வருகிறது. ஏன் என்றால் அவர்களுடைய பகுதியிலே நடுவதற்கு அவர்களுடைய அனுமதியைப் பெறவேண்டும். ஆகவே, இது மத்திய அரசோடு கலந்து முடிவு செய்ய வேண்டிய பிரச்சினை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 232, திரு. ஏ.எம். பரமசிவன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

232—

மதுரையில் நவீனப் பேருந்து நிலையம் அமைத்தல்

*9080— திரு ஏ. எம். பரமசிவன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

உலக வங்கி நிதியுதவித் திட்டத்தின் கீழ் மதுரை மாநகரின் பேருந்து நெரிசலைத் தவிர்க்க கம்போஸ்ட் உரக்கிடங்கு பகுதியில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை நகரில் நவீன பேருந்து நிலையம் அமைக்கும் திட்டம் சென்னை திட்ட மேலாண்மைக் குழுமத்திடம் (Project Management Group) ஆய்வில் உள்ளது.

முற்பகல் 10-35

திரு. ஏ. எம். பரமசிவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆண்டு இந்தத் திட்டமானது தயாரிக்கப் பட்டு உலக வங்கியினுடைய அனுமதி பெற அனுப்பப்பட்டது? அதனுடைய தற்போதைய நிலை என்ன என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியின் பெரியார் பேருந்து நிலையம் ஏறத்தாழ 4.5 ஏக்கர் பரப்பளவில் செயல் பட்டு வருகிறது. வளர்ந்து வரும் மாநகரின் தேவைகளை இந்தப் பேருந்து நிலையம் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் உள்ளது. எனவே மாநகரத்தில் ஒரு புதிய மத்தியப் பேருந்து நிலையம் மதுரை மாநகராட்சிக்குச் சொந்தமான தல்லாகுளம் கிராமம் சர்வே எண். 137 முதல் 141 வரை சுமார் 70 ஏக்கர் பரப் பளவில் உள்ள உரக் கிடங்கு இடத்தில் மாற்றி அமைக்கத் திட்ட மிடப் பட்டுள்ளது. கன்னியாகுமரி சாலையில் திருச்சி சாலையை இணைக்கும் புற வழிச் சாலை அமைக்கும் பணி தொடங்கப் பட்டுள்ளது. இந்த புற வழிச்சாலை உத்தேச மையப் பேருந்து நிலையம் அருகில் மேலூர் சாலையொடு இணைவதால், பேருந்து கள் மையப் பேருந்து நிலையத்தை எளிதில் அடைய வாய்ப்பு உள்ளது. இதனால் மாநகரில் மையப் பகுதியில் போக்குவரத்து நெருக்கடி பெருமளவில் குறையும். தற்போது மதுரை மாநகரில் செயற்படுத்தும் திட்டங்களுக்கு திட்ட மேலாண்மைக் குழுமம் —ப்ராஜக்ட் மேனேஜ்மெண்ட் குரூப்— கடனுதவி அளித்து வரு கிறது. இந்த உத்தேசப் பேருந்து நிலையத்திற்குப் வருவாய் பயனளிக்கும் திட்டத்தின் கீழ் திட்ட மேலாண்மைக் குழுமத்திடம் கடன் தொகை பெற்று, இத் திட்டம் செயற்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு தற்போதைய திருத்திய மதிப்பீடு சுமார் 20 கோடி ரூபாய் என மதிப்பிடப்படுகிறது. இத்திட்டத்திற்காக உலக வங்கியின் கடனுதவி எதிர் பார்ப்பதோடு, மாநகராட்சி, தமிழக அரசு மற்றும் நிதி நிறுவனங்களின் நிதி ஆதாரங்களைக் கொண்டு செயல் படுத்துவது குறித்து தீவிரமாக அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஓ. எஸ். அமர் நாத்.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே நவீனப் பேருந்து நிலையம் அமைப் பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்த நவீனப் பேருந்து நிலையத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டி ருக்கிறது, அந்த நவீன பேருந்து நிலையம் எப்போது கட்டப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 ஏடரல் 2]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேருந்து நிலையத்தைக் கட்டுவதற்கு சுமார் 20 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப் பட்டு அது ஆய்வில் இருக்கிற காரணத்தாலே, இதைப் பற்றித் தமிழக அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 233, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

233—

சங்ககிரியைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு குடிநீர் வழங்கல்.

11333—டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

சங்ககிரியிலிருந்து அக்கமாப்பேட்டை மற்றும் சங்ககிரியைச் சுற்றியுள்ள சில கிராமங்களுக்கு குடிநீர் வழங்க ஒரு Diversion line-ஐ இந்த நிதியாண்டில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரி பேரூராட்சி ரூ. 5.00 இலட்சம் வைப்பு நிதியை (Deposit) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தினால், திட்டம் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சியிலிருந்து 5 இலட்சம் ரூபாயைச் செலுத்தினால் இந்தத் திட்டம் நடப்பு ஆண்டிலேயே செயல் படுத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிலேயே இந்தத் திட்டத்தை செயற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். காலத்தில் சங்ககிரி-பள்ளிபாளையம் கூட்டுக் குடிநீர்த்திட்டம் செயல்படுத்தப்பட்டது. அப்படி இருந்தும் சங்ககிரி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கும் மற்றும் சங்ககிரியில் உள்ள மருத்துவமனையிலும் போதுமான